

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று – சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களான சு.வெங்கடேசன் (மதுரை), சச்சிதானந்தம் (திண்டுக்கல்) ஆகியோர் சந்தித்துப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.இராமகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



திருவண்ணாமலை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிப்பும் ஆணையும் வெளியிட்டமைக்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு சந்தித்து, தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருவண்ணாமலை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நகர் மன்றத் தலைவர் உள்ளிட்ட முன்னணியினரும் உடன் உள்ளார்கள்.



வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே நீர்வளத்துறை சார்பில் ரூ.12.94கோடியில் கட்டப்பட்டுள்ள தரைப்பாலத்தை கழகப்பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழகசெயலாளர் கருணாகரன், என்ஜினியர் கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசு

# புதிய கல்விக் கொள்கையை ஏற்காது !

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திட்டவட்ட அறிவிப்பு!

*திருச்சி, மார்ச் 17-*

"தமிழ்நாடு அரசு புதிய கல்விக் கொள்கையை ஏற்காது" என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.



திருச்சியில் தமிழ்நாடு அரசு பாடநூல் கழக விற்பனை பிரிவை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை திட்டவட்டமாக எதிர்க்கிறோம் - பி.எம்.ஸ்ரீ. புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள தனி கமிட்டி அமைக்கப்படும்! மாநில உரிமையைப் பறிக்கும் வகையில் தமிழக அரசுக்கு ஒன்றிய அரசு இதுபோன்று அழுத்தத்தை தருகிறது. புதிய கல்விக் கொள்கையில் பிஎம்ஸ்ரீ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து ஆனது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்து ஆய்வு மேற்கொள்ள தமிழக அரசு சார்பில் மாநிலத்துக்கென ஒரு கமிட்டி உருவாக்கப்படும். நமக்கு தர வேண்டிய மூன்றாவது தவணை, நான்காவது தவணைத்தொகை 1200 கோடி மட்டுமல்ல... அடுத்த ஆண்டு தர வேண்டிய 3 ஆயிரத்து 800 கோடி ரூபாயையும் இதில் தொடர்புப் படுத்துகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்ன ஆலோசனை சொல்கிறார்களோ, நம்முடைய மாநிலத்திற்கு என்ன தேவையோ அதை மட்டுமே செய்வோம். மாநில கல்விக் கொள்கையை அதனால் தான் உருவாக்குகிறோம். எனவே கல்வியை பொது பட்டியலில் இருந்து மாநில பட்டியலில் கொண்டு வர வேண்டியது தான் எங்களுடைய எண்ணம். அதை நோக்கி தான் நாங்கள் செயல்படுகிறோம் எங்களுடைய நிலைப்பாட்டில் இருந்து மாற்று கொள்கைக்குச் செல்வதாக யாரும் எண்ண வேண்டாம்.

புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். மாநில உரிமையைப் பறிக்கும் வகையில் தமிழக அரசுக்கு ஒன்றிய அரசு இதுபோன்று அழுத்தத்தை தருகிறது. பி.எம். ஸ்ரீ. மற்றும் தமிழகத்திற்கு தர வேண்டிய நிதி என்ற இரண்டையும் சம்பந்தமே இல்லாமல் தொடர்பு செய்து அழுத்தத்தை தருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் அன்பில்மகேஸ்பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறினார்.



தூத்துக்குடி பாளையங்கோட்டை சாலையில் உள்ள மாநகராட்சி ஐந்திணை பூங்காவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள் பயன்பெறும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள படிப்பக வளாகத்தை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், தி.மு.க. மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.


